## வக்ஃபு வாரிய மசோதா:

# எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பால் கூட்டுக்குழு ஆய்வுக்கு அனுப்பிவைப்பு!

### ஒன்றிய அரசு பணிந்தது!

புதுடெல்லி, ஆக.10 -

**வக்ஃபு வாரியத்தின் அதிகாரங்களைக் குறைக்க வகை செய்யும் சட்ட திருத்த மசோதாவை எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்த்ததால் நாடாளுமன்ற கூட்டுக் குழு ஆய்வுக்கு அனுப்புவதாக மக்களவையில் ஒன்றிய அமைச்சர் கிரண் ரிஜூஜ் அறிவித்தார்.**

வக்ஃபு வாரிய சட்ட திருத்த மசோதா நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டவுடன் மசோதாவுக்கு அறிமுக நிலையிலேயே அனைத்து எதிர்க்கட்சிகளும் மிகக் கடுமையாக எதிர்த்தன. இதனையடுத்து வேறுவழியே இல்லாமல் வக்பு சட்ட திருத்த மசோதா தற்போது நாடாளுமன்ற கூட்டுக் குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் பொது மக்கள் பயன்பாட்டுக்காக மசூதிகள், தர்காக்கள், மதரஸாக்களின் பெயரில் இஸ்லாமியர்கள் தானமாக நிலம் வழங்கும் இந்த நிலம் தான் வக்பு வாரிய சொத்துகள் எனப்படுகின்றன. இதற்காக 1954-ல் ஒரு சட்டம் உருவாக்கப்பட்டது. 1958-ம் ஆண்டு அனைத்து மாநிலங்களிலும் வக்பு வாரியங்களும் அமைக்கப் பட்டன.

வக்ஃபு சொத்துகளைக் கண்காணிக்கும். வக்பு வாரிய சொத்துகள் தொடர்பான விரிவான சட்டம் 1995-ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. இந்த சட்டத்திலும் 2013-ம் ஆண்டு அப்போதைய காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு திருத்தம் கொண்டு வந்தது. இதனடிப்படையில்தான் வக்பு வாரியம் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் சுமார் 70,000 வக்ஃபு வாரிய சொத்துகள் உள்ளன. அதாவது 2 லட்சம் ஏக்கர் அளவுக்கு வக்ஃபு வாரிய சொத்துகள் இருக்கின்றன. மசூதிகள் உள்ளிட்ட 7 ஆயிரத்துக்கும் அதிகமான வக்ஃபு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. இவற்றை தமிழ்நாடு வக்ஃபு வாரியம் கண்காணித்து வருகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் இதே முறையில்தான் வக்ஃபு வாரியம் செயல்பட்டு வருகிறது.

தற்போது 1995-ம் ஆண்டு வக்ஃபு வாரிய சட்டத்தில் திருத்தங்களை மத்தியில் ஆளும் பாஜக அரசு கொண்டு வருகிறது. குறிப்பாக வக்ஃபு வாரியம் உரிமை கோரும் சொத்துகள் குறித்து ஆய்வு செய்ய மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஒரு நிர்வாகக் குழு அமைக்கப்படும்; வக்ஃபு வாரியத்தில் முஸ்லிம் அல்லாத பிற மதத்தவரும் உறுப்பினராக இடம் பெறுதல்; வக்ஃபு வாரியத்தில் கணிசமான அளவு முஸ்லிம் பெண்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்குதல் உள்ளிட்ட திருத்தங்கள் இடம் பெற வாய்ப்புள்ளது.

ஒன்றிய அரசின் இந்த வக்ஃபு வாரிய சட்ட திருத்த மசோதாவுக்கு ஏற்கனவே கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. தமிழ்நாடு வக்ஃபு வாரியத் தலைவர் எம்.அப்துல் ரஹ்மான் அறிக்கையில், “வக்ஃபு சட்டங்களை பலவீனப்படுத்த பா.ஜ.க. முயற்சித்தால் நாடாளுமன்றத்தின் மக்களவையிலும், மாநிலங்களவையிலும் அந்த முயற்சியைத் தோற்கடிக்கக்கூடிய வகையிலான வேலைகளை - நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் இந்தியா கூட்டணி கட்சிகள் மட்டுமின்றி, ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் நிதீஷ்குமார், சந்திரபாபு நாயுடு கட்சிகளில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்துக் கொண்டு நாடாளுமன்றத்தில் இந்த சட்டத் திருத்தம் நிறைவேற்றப்படாமல் பாதுகாப்பதற்கு அனைவரும் ஒன்று சேர வேண்டியது காலத்தின் கட்டாயமாகும் என தெரிவித்திருந்தார். மேலும் மஜ்லிஸ் கட்சித் தலைவர் ஒவைசியும் கடும் எதிர்ப்பு தெரிவித்து இருந்தார்.

இந்த நிலையில் மக்களவையில் நேற்று ஒன்றிய அமைச்சர் கிரண் ரிஜுஜு இந்த மசோதாவைத் தாக்கல் செய்தார். இதனையடுத்து மசோதா மீது விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத்தில் காங்கிரஸ், திமுக, சமாஜ்வாதி, இடதுசாரிகள், மஜ்லிஸ் கட்சி, திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அனைத்தும் மசோதாவை கடுமையாக எதிர்த்தன. இதன் பின்னர் ஒன்றிய அமைச்சர் கிரண் ரிஜுஜு விளக்கம் அளித்தார். ஆனால் அவர் விளக்கம் அளிக்கும் போதே அதனை நிராகரித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

வக்ஃபு சட்ட திருத்த மசோதாவுக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால் வேறுவழியில்லாமல் இந்த மசோதாவை நாடாளுமன்ற கூட்டுக் குழு ஆய்வுக்கு அனுப்பி வைப்பதாக மக்களவையில் ஒன்றிய அமைச்சர் கிரண் ரிஜுஜு அறிவித்தார்.

---

## புதுக்கோட்டை மாவட்டம் நச்சாத்துப்பட்டியில்

# ‘மக்களுடன் முதல்வர்’ திட்ட சிறப்பு முகாம்!

### அமைச்சர் எஸ்.ரகுபதி மக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றார்!

புதுக்கோட்டை ஆக.10-

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், நச்சாந்துப் பட்டி கிராமத்தில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாமில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 06.08.2024 அன்று மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்தார்.

பின்னர், அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் நலனிற்கு அதிக முக்கியத்துவம் அளித்து மக்கள்நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் அவர்களைச் சென்று சேரும் வகையில், நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திடவும், திராவிட மாடல் ஆட்சியின் மற்றுமொரு மைல்கல்லாக “மக்களுடன் முதல்வர்” என்ற புதிய திட்டத்தை மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.12.2023 அன்று தொடங்கி வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, இத்திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 11.07.2024 அன்று ஊரகப் பகுதிகளுக்கும் விரிவுப்படுத்தி தொடங்கி வைத்தார்கள்.

இந்நிலையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் 11.07.2024 முதல் 10.09.2024 வரை 13 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 495 கிராம ஊராட்சிகளில் 66 “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, திருமயம் ஊராட்சி ஒன்றியம், நச்சாந்துப்பட்டி கிராமத்தில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம் நேரில் பார்வையிடப் பட்டது.

மேலும் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், அரசமலை கிராமத்தில் “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம் 08.08.2024 அன்று நடைபெற உள்ளது.

இம்முகாம்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, எரிசக்தித்துறை உள்ளிட்ட பல்வேறு 15 அரசுத் துறைகள் சார்ந்த 44 சேவைகள் வழங்கப்படுகிறது.

இம்முகாம்களில் பெறப்பட்ட அனைத்து மனுக்களும் சம்பந்தப்பட்ட துறைகளால் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் வழங்கப்பட்டு தீர்வு காணப்படுகிறது.

எனவே இம்முகாம்களை பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா, ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், வட்டாட்சியர் புவியரசன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சங்கர், வெங்கடேசன் மற்றும் இரா.கணேசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

## பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் தலைமையில் –

# வணிக நிறுவனங்களின் பெயர் பலகை தமிழில் மாற்றிட நடவடிக்கை எடுப்பீர்!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதனை சந்தித்து தமிழறிஞர்கள் கோரிக்கை!

சென்னை, ஆக. 10 -

அனைத்துத் தமிழ் இயக்கங்களின் கூட்டமைப்பு பன்னாட்டுத் தமிழுறவு மன்றம், அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் பாதுகாப்பு இயக்கம் உள்ளிட்ட தமிழ் அமைப்புகள் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் தலைமையில் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநானை சந்தித்து, தமிழ்நாடு வணிக நிறுவனங்களின் பெயர்ப்பலகைகளை தமிழில் மாற்றிட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.

இது குறித்து அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: -

தமிழ்நாட்டிலுள்ள அரசு மற்றும் தனியார் தொழில் நிறுவனங்கள், வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளில் தமிழ் மொழிக்கு முதன்மை இடம் வழங்கிடவும், தெருப் பெயர்களிலுள்ள ஆங்கிலம் மற்றும் சமற்கிருதப் பெயர்களை நீக்கி தமிழ்ப் பெயரிடவும் வலியுறுத்தி கடந்த காலங்களில் பல்வேறு போராட்டங்களை நடத்தியதன் பயனாக, விளம்பரப் பலகைகளில் தமிழுக்கு முதன்மை இடம் வழங்கிடும் வகையில் முன்னாள் முதல்வர், முத்தமிழ் அறிஞர், கலைஞர் அவர்களால் அரசாணை வெளியிடப் பட்டது.

மேற்படி அரசாணையினை மதிக்காத தொழில் மற்றும் வணிக நிறுவனத்திடம் தண்டம் வசூலிக்கப்படும் எனவும், அப்போது அறிவிக்கப்பட்டது. அதே கருத்தினை வலியுறுத்தி இன்றைய நம் முதன்மை முதல்வர் தளபதி அவர்களும் அண்மையில் அறிக்கை வெளியிட்டார். இருப்பினும், தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள் அதனை ஏற்றுப் பின்பற்றுவதாகத் தெரியவில்லை என்பதையே அவர்களின் ஆங்கில விளம்பரப் பலகைகள் நாடு முழுவதும் பறைசாற்றி வருகின்றன.

நம் முதல்வரின் வழியில், தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களும் மேற்காணும் தமிழ் வளர்ச்சிக்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

யாமும், வணிகர் பேரவைத் தலைவரை சந்தித்து வணிக நிலையங்களின் பெயர்ப்பலகைகளை தமிழில் வைக்க வேண்டியுள்ளோம். தமிழ்நாடு அரசு தமிழ்ப்பெயர்ப் பலகைகள் வைக்கும் நடவடிக்கைகளுக்கு தமிழ் அமைப்புகள் முழுமை ஒத்துழைப்புத் தருகிறோம்; ஆவன செய்திட வேண்டுகிறோம்.

இவ்வாறு அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இச்சந்திப்பில் வா.மு. சேதுராமன், ஆ.சி.சின்னப்பத் தமிழர், வா.மு.சே.திருவள்ளுவன், மதிஅரசு, இசைப்பாவலர் நா.நந்தன், வை.மா.குமார், கவிஞர் காமராசன் மற்றும் தமிழ் அமைப்பினர் கலந்து கொண்டனர்.

---



முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை திருப்பூர் மாவட்டம், மூலனூர் பேரூர் கழகத்தின் சார்பில் பேரூர் கழக செயலாளர் பேரூராட்சி தலைவர் க.தெண்டபாணி ஏற்பாட்டில் மூலனூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் துரை தமிழரசு முன்னிலையில் நடைபெற்ற முதலாம் ஆண்டு ரேக்ளா பந்தயத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச்செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் ஆகியோர் துவக்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினர். இதில் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் எஸ்.கார்த்திக் உட்பட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சேலம் ஆத்தூர் ஒன்றியத்தில் கலைஞர் நினைவு நாள்!

சேலம், ஆக. 10 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாளையொட்டி சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் சார்பில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு ஒன்றிய கழக செயலாளர் டாக்டர் வே. செழியன் தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் ஒன்றிய துணை செயலாளர்கள் சசிகுமார், தமிழ்ச்செல்வி, சிதம்பரம், ஒன்றிய பொருளாளர் கிருஷ்ண மூர்த்தி, பேரூர் கழக செயலாளர் காங்கமுத்து, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் வரதராஜன், மாவட்டத் தொழிலாளர் அணி அமைப்பாளர் ராஜவேல், துணை அமைப்பாளர் கருணாநிதி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் ராஜேந்திரன், துணை அமைப்பாளர் பைத்தூர் ரவி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் சந்திரசேகரன், மாவட்ட பிரதிநிதி முருகன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் சேகர், செந்தில், அய்யாகண்ணு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

# முத்தமிழர் மூச்சொலியே! முரசொலியே! வாழியவே!



கையெழுத்துப் பிரதியாய்
கருவாகித் தமிழர்தம்
மெய்யெழுத்தாய், உயிரெழுத்தாய்,
மேவும் உயிர் மெய்யெழுத்தாய்,
வையத் தமிழர்நிலை
மாற்றவந்த தலையெழுத்தாய்
உய்யும் எங்கள் வாழ்வுக்கே
உணர்வளித்த விழுமியமே!

ஏற்றியுனை மூட்டைகட்டி
இருமுதுகில் சுமந்துவர,
காற்றடித்து மரப்பாலம்
கவிழ்ந்திட, “ஓடம்போக்கி”
ஆற்றினிலே கலைஞருடன்
அவர்நண்பர் தென்னனுடன்
சேற்றில் விழுந்தெழுந்த
செல்வமே! நித்திலமே!

மாணுயர்ந்த செந்தமிழர்
மரபுகளை உலகுக்குக்
காணுக எனக்காட்டும்
கருத்துமணிப் பெட்டகமே!
நாணத் தகும் அந்த
“நால்வருணப்” பிற்போக்கை
ஆணிவே ருடன்கிள்ளி
அறுத்தஅறி வாயுதமே!

முரட்டுப் பழமைகளின்
மூட நம்பிக்கை
இருட்டைக் கிழித்தெறிய
எழுந்துவந்த ஒளிக்கதிரே!
மருட்டும் மதவாத
மடமைகளின் கொடுமைகளைப்
புரட்டித் தகர்த்தெறிந்துப்
பொசுக்கவந்த கனற்பிழம்பே!

நாடு,மொழி, கலாச்சார,
நாகரிகம், பண்பாட்டைப்
பாடுதமிழ்ப் பாவியமே!
பைந்தமிழர் உள்ளமெலாம்
ஊடுருவிப் பதிந்ததமிழ்
ஓவியமே! எந்தமிழர்
நீடுபுகழ் வரலாற்றை
நினைவூட்டும் காவியமே!

ஒழிக!எனும் ஒடுக்குமுறை!
உருவமற்றுத் தடயமின்றி
அழிக!எனும் அடக்குமுறை!
அத்தனைக்கும் ஈடுதந்தே
எழும்”எண்பத் திரண்டாண்டாய்”
எதிர்நீச்சல் போட்டுவரும்
கழகத்தின் கேடயமே!
களமறவர் போர்வாளே!

ஈர்த்திழுத்தே இளைஞர்களின்
இதயத்தில் தமிழுணர்ச்சி
சேர்த்துப் பெருகவைத்த
செயலூக்க நிலைக்களமே!
ஆர்த்து மொழிப்போரில்
அணிவகுத்த வீரருக்கு
வார்த்துப் படைக்கலன்கள்
வடித்தளித்த உலைக்களமே!

சொத்தெழுதி வைத்திருக்கும்
பத்திரம்போல், எம்நெஞ்சில்
பத்திரமாய் வாழ்கின்ற
சித்திரமே! ஆருயிரே!
கொத்துமலர்ச் சிந்தனைகள்
கொழிக்கின்ற பூக்காடே!
“முத்துவிழா” வும்கடந்து
முன்னேறும் பொன்னேடே!

தித்திக்கும் தமிழுக்கோர்
தீங்கென்றால் மறுநொடியே
எத்திக்கும் அதிரவைக்கும்
இடிமுழக்க எதிரொலியே!
முத்தமிழர்க் கென்றும்,உயிர்
மூச்சொலியே! பேச்சொலியே!
தத்துவத்தின் அடைமொழியே!
தன்மானச் சுடரொளியே!

கண்ணின் மணிகளென,
“கலைஞர்மன சாட்சி”யென,
அண்ணன்எங்கள் மாறன்என
அவர்இளவல் செல்வம்என,
எண்ணமெலாம் இயக்கம்என
இயங்கிவரும் தொடர்ச்சியினால்
வண்ணம்இன்னும் மெருகேறி
வளர்ந்துமிளிர் பேரொளியே!

மலைபோலும் எதிர்ப்புகளை
மணல்போலும் தூளாக்கிக்
கலைஞரின் இலட்சியக்
கனவுகளை நனவாக்கும்
தலைவர்எங்கள் “ தளபதியை”
தமிழ்நாட்டின் முதல்வராய்
நிலைநிறுத்தும் வெஞ்சமரில்
நிமிர்ந்துநின்ற அறிவொளியே!

கிளம்பிற்றுப் படைகளென,
கீழ்வானம் சிவந்ததென,
இளஞ்சிங்கக் குருளைகளை
எழுச்சிமிகு வேங்கைகளை
உளங்கவர்ந்த அடலேறு
“உதயநிதி” தலைமையிலே
களங்குதிக்கச் சூடேற்றும்
காகிதமின் விசையொளியே!

சாத்திரச் சடங்குகளில்
சாதிகளில் வீழ்ந்துழன்ற
மாத்தமிழர் துயில்கலைத்து
மண்டியவல் லிருள்துடைத்துப்
பூத்தவிடி வெள்ளியெனப்
புகழ்த்தலைவர் கலைஞருக்கு
“மூத்தபிள்ளை” யாகவந்த
முரசொலியே! வாழியவே!

கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்**

